

# DREAM, DREAM, DREAM CONVERT THE DREAMS INTO THOUGHTS AND THOUGHTS INTO ACTION

***Dr. A.P.J. Abdul Kalam***

"ASK WHAT WE CAN DO FOR INDIA AND DO WHAT HAS TO BE DONE TO MAKE INDIA WHAT AMERICA AND OTHER WESTERN COUNTRIES ARE TODAY"

***Dr. A.P.J. Abdul Kalam***

# TEACH YOUR CHILDREN WELL

**This is an extract of a letter written by Abraham Lincoln to the Headmaster of his son's school. The values and ideals he speaks of continue to be relevant even today.**

He will have to learn I know, that all men are not just, all men are not true. But teach him also that for every selfish politician, there is a dedicated leader and for every scoundrel there is a hero.... Teach him that for every enemy there is a friend. It will take time, I know, but teach him, if you can, that a dollar earned is of far more value than five found... Teach him to learn to lose.... and also to enjoy winning. Steer him away from envy; if you can, teach him the secret of quiet laughter. Let him learn early that the bullies are the easiest to lick... Teach him if you can, the wonder of books.... but also give him quiet time to ponder the eternal mystery of birds in the sky, bees in the sun and flowers on a green hill side.

In school teach him it is far more honourable to fail than to cheat... Teach him to have faith in his own ideas, even if everyone tells him he is wrong... Teach him to be gentle with gentle people and tough with the tough. Try to give him the strength not to follow the crowd when everyone is getting on the bandwagon. Teach him to listen to all men.... but teach him also to filter all he hears on a screen of truth.

Teach him if you can, how to laugh when he is sad... Teach him there is no shame in tears. Teach him to scoff at cynics and to be beware of too much sweetness....Teach him to sell his brawn and brain to the highest bidder, but never to put a price tag on his heart and soul. Teach him to close his ears to a howling mob.... and to stand and fight if he thinks he is right.

Teach him gently but do not cuddle him, because only the test of fire makes fine steel. Let him have the courage to be impatient. Let him have the patience to be brave. Teach him always to have sublime faith in himself, because then he will always have sublime faith in humankind.

***- Abraham Lincoln.***

BEING WISE AFTER A MISFORTUNE

IS NOT SIGN OF TRUE WISDOM

# புதுமணப்பெண்ணிற்கு சில ஆலோசனைகள்

- கணவரின் நெருங்கிய உறவினர்களைப் பற்றி முன் கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். எல்லோரிடமும் நல்ல பெயரெடுக்க இது உதவும்.
- உறவினர்களின் பிறந்தநாள், திருமண நாட்களை (குறிப்பாக மாமனார், மாமியார்) தெரிந்துகொண்டு பரிசு வழங்கி அசத்தலாம். அது உங்களுக்கும் அவர்களுக்கும் அந்யோன்னியத்தை அதிகப்படுத்தும்.
- புகுந்த வீட்டை ஒரு சிறைச்சாலையாகவும் மாமியாரை கடுங்காவல் அதிகாரியாகவும் வீணாக கற்பனை செய்து கொள்ளாதீர்கள். உங்களின் அன்பும் நேர்மையும் எத்தகையவரையும் மாற்றும்.
- நல்ல பெயர் வாங்கவேண்டும் என்பதற்காக ஆரம்பத்தில் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்யாதீர்கள். நாத்தனார், கொழுந்தனார் என்று எல்லோருக்குமே வேலையை பகிர்ந்து கொடுங்கள். இதனால் உங்கள் வேலைப்பளு குறைவதோடு, அவர்களுக்கும் பொறுப்பு உண்டாகும்.
- மாமியாருக்கு வேலையை குறைப்பதாக நினைத்துக் கொண்டு போனவுடனேயே பணவிஷயத்தில் கை வைக்காதீர்கள். அவர்களாகவே பொறுப்பை ஒப்படைக்கும் வரை காத்திருங்கள்.
- அருகிலுள்ள மருத்துவமனை, காவல்நிலையம், தீயணைப்புத் துறை போன்றவற்றின் தொலைபேசி எண்களை தெரிந்து வைத்து ஏதேனும் ஒரு முக்கியமான இடத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். ஆபத்தான நேரங்களில் உதவும்.
- கணவர் உங்களுக்கென்று ஆசையாக ஏதாவது வாங்கி வந்தாலும் கூட, அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுங்கள்.
- எங்க வீட்டுல ராசாத்தி மாதிரி வளர்ந்தேனே என்று புலம்பி, புகுந்த வீட்டை தாழ்த்திப் பேசாதீர்கள். பிறந்த வீட்டில் இருக்கும் வசதி கணவர் வீட்டில் குறைந்திருந்தாலும், ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.
- உங்கள் விருப்பங்களை கணவர் மீது திணிப்பதோ, உங்களுக்குப் பிடிக்கும் என்பதற்காக உங்களுக்கு விருப்பம் இல்லாததை வலுக்கட்டாயமாக செய்யச் சொல்வதோ பின்னாளில் சலசலப்பை ஏற்படுத்தும்.
- கணவன் மனைவிக்கு இடையில் எந்தவொரு ரகசியமும் வேண்டாமே!
- அலுவலக வேலை காரணமாக வீட்டிற்கு வர தாமதமாகும் என்றால் முன்னதாகவே தெரிவித்து விடுங்கள்.
- சிறியவரோ, பெரியவரோ, சொல்வது சரியாக இருந்தால் அவருடைய பேச்சுக்கு மதிப்பு கொடுங்கள்.
- புகுந்த வீட்டை உங்களுக்கான அரண்மனையாக நினைத்துக் கொள்ளுங்கள். சுத்தமாகவும், சந்தோஷமாகவும் வைத்திருப்பது உங்கள் கடமை.
- இல்லத்தரசியாக இருக்க விரும்புவதைவிட இளவரசியாக மற்றவர்கள் கருதும்படி வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

# இல்லற வாழ்க்கை இனித்திட...

1. ஒரே சமயத்தில் இருவருமே கோபப்படாதீர்கள்.

2. மிக மிக சாதாராண விஷயங்களில், ஒருவர் மீது ஒருவர் எரிந்து விழாதீர்கள்.

3. வாக்குவாதம் ஏற்படுகின்ற பிரச்சினைகளில் ஒருவர் மற்றவரை ஜெயிக்கவிட்டு மகிழ்ச்சி அடையுங்கள். விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை எப்பொழுதுமே!

4. விமர்சனத்தையே வாஞ்சையுடனும் அன்புடனும் செய்து பாருங்கள்.

5. கடந்தகால தவறுகளைச் சுட்டிக் காட்டாதீர்கள்.

6. உலகத்திற்காக போலியாக வாழ்வதைக் காட்டிலும் உங்களுக்காகவே வாழ்ந்து பாருங்களேன்.

7. விவாதம் தவிர்க்க முடியாதது என்றால், கூடியவரைக்கும் அதை ஒத்திப் போடுங்கள்.

8. ஒரு நாளைக்கு ஒரு முறையாவது ஒரு அன்பான வார்த்தையோ அல்லது வாழ்த்தோ உங்கள் துணையிடம் உபயோகப்படுத்திப் பாருங்கள்.

9. செய்த தவறை உணரும்போது அதை ஒத்துக் கொள்ளவும் அல்லது அதற்காக மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள்.

10. இல்லற வாழ்க்கை இனித்திட, மூன்று தாரக மந்திரங்கள்;

**ADAPT** - சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல்

**ADJUST** - அனுசரித்துப் போகுதல்

**ACCOMODATE** - மற்றவர்களை மதித்து நடத்தல்

LEADERSHIP IS AN ART PERFECTED OVER THE YEARS AND NOT STUMBLED UPON OVERNIGHT.

# TOO MUCH OF ANYTHING

# IS GOOD FOR NOTHING

# பிறந்த நாள் வாழ்த்துக்கள் !



*There are two ways to live your life.*

*One is as though, nothing is a miracle.*

*The other is as though everything is a miracle.*

# One Minute Mother !

**1. சொல்வதற்கு முன் செய்யுங்கள்:** எந்த நல்ல விஷயத்தையும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு முன் நீங்களே அதைப் பின்பற்றுங்கள். ''டி.வி. பார்த்துக்கிட்டே சாப்பிடாதேன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்'' என்று கத்தும் பெற்றோர், தாங்கள் அதே தவற்றைச் செய்வார்கள். 'நமக்கு மட்டும் பெரிசா அட்வைஸ் பண்றாங்க, இவங்க பண்ணினா மட்டும் தப்பில்லையா?' என்று குழந்தை யோசிக்கும். பிறகு அதைத் திருத்தவே முடியாது.

**2. யாருக்கு நல்லது?:** உங்களின் விருப்பத்தைக் குழந்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். நீங்கள் குழந்தையாக இருந்தபோது, உங்கள் பெற்றோரின் எத்தனை ஆசைகளை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். அவர்களின் அறிவுரைகளை எந்தளவுக்கு நீங்கள் பின்பற்றியிருக்கின்றீர்கள் என்று அலசி ஆராய்ந்து பாருங்கள். மற்றவர்களுக்காக மட்டுமே அவற்றை நீங்கள் பின்பற்றும்பட்சத்தில், மன்னிக்கவும், குழந்தை வளர்ப்பு முறையை நீங்கள் மாற்றிக்கொண்டே ஆக வேண்டும். எந்த ஒழுக்கத்தையும் தன் நல்லதுக்காக பின்பற்றக் கற்றுத் தருவதுதான் பெற்றோரின் முக்கிய கடமை.

**3. மூடி மறைக்காதீர்கள்:** குழந்தைகளிடம் எதையும் மூடி மறைக்காதீர்கள். அவர்கள் எதிரே சண்டை போடாதீர்கள். அடம்பிடிப்பது, கோபப்படுவது, எதற்கெடுத்தாலும் அழுவது போன்ற எதிர்மறையான குணங்கள் குழந்தையிடம் வளர்வது இந்தத் தருணங்களில்தான்.

**4. எவ்வளவு அல்ல.....எப்படி?:** ''பிள்ளைகளை கவனிக்கவே நேரம் இருக்கறதில்லே'' என்று புலம்பலோடு தன் குழந்தைகளை ஆயாவிடம் விட்டுவிட்டு வேலைக்குப் போகும் அம்மாக்களுக்கு ஒரு முக்கியமான தகவல். குழந்தைகளுடன் எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. கொஞ்சநேரமாக இருந்தாலும் அதை எப்படி செலவிடுகிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

**5. என்ன செய்வாய்? எப்படிச் செய்வாய்?:** குழந்தையிடம் ஒரு சின்ன பயிற்சியை அடிக்கடி நடத்துங்கள். தினசரி ஒரு வெள்ளைத் தாளை குழந்தையின் கையில் கொடுங்கள். அந்த வாரத்துக்கான குழந்தையின் குறிக்கோள் என்ன என்பதை எழுதச் சொல்லுங்கள். ஒரு நிமிடத்துக்குள் எழுதி முடிக்கவும், வாசிக்கவும் பயிற்சி கொடுங்கள். உதாரணமாக,

1. கணக்குப் பாடத்தில் நிறைய மார்க் வாங்கணும், டிவி பார்க்காமல் தினமும் முப்பது நிமிடம் படிப்பேன்.

2. பேச்சுப் போட்டியில் முதலாவதா வரணும். அதுக்காக தொடர்ந்து பயிற்சி எடுப்பேன்.

3. நான் ஒல்லியா இருக்கறதா ஃப்ரெண்ட்ஸ் கிண்டல் பண்றாங்க. அதனால தினமும் அம்மா குடுக்கற சாப்பாட்டை வீணாக்காமல் சாப்பிடுவேன்.

இப்படியானதாக இருக்க வேண்டும். நீங்களே முன்மாதிரியாக, உங்களின் அந்த வார வேலைகளைப் பட்டியல் போட்டு, அதை எப்படி முடிக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். அவற்றைத் தவறாமல் முடித்துக் காட்டுங்கள்.

ஞாயிற்றுக்கிழமையன்று அந்த தாள்களை எடுத்து வைத்துக்கொண்டு எதையெல்லாம் குழந்தை நிறைவேற்றியிருக்கிறது என்று பேசுங்கள், பாராட்டுங்கள், தவறுகளைத் திருத்த உதவி செய்யுங்கள். இதைச் செய்வதன் மூலம் குழந்தை தனது வேலைகளைக் குறித்தநேரத்தில் ஒழுங்காக முடிக்கப் பழகும்.

**6. ஏன்? எதற்கு? :** ஒரு விஷயத்தைச் செய்தே ஆக வேண்டும் என்று குழந்தையிடம் அடம்பிடிக்கும் பெற்றோர்கள் இங்கு அதிகம். பரீட்சையில் நூறு மார்க் வாங்க வேண்டும் என்று மிரட்டும் பெற்றோர், ஏன் நூறுமார்க் வாங்க வேண்டும், அது குழந்தைக்கு எந்த வகையில் பெருமை சேர்க்கும் என்பதைப் புரிய வைப்பது இல்லை. குழந்தையிடம் ஒரு வேலையைச் சொல்வதற்கு முன், அதனால் ஏற்படும் பயன்களைக் குழந்தைக்குப் புரியவைத்தால், நீங்கள் விரும்பியதைவிடவே கச்சிதமாக முடித்து அசத்துவார்கள்!

**7. உற்றுப்பாருங்கள், தொட்டுப்பேசுங்கள் :** ஒரு நிமிடம் உங்கள் குழந்தையின் முகத்தைக் கனிவோடு உற்றுப் பாருங்கள். ஆதரவாகத் தொட்டுப் பேசுங்கள். இப்படி தினமும் பத்து முறையாவது செய்யுங்கள். ''அம்மாவுக்கு நம்மீது அக்கறை இருக்கிறது'' என்று குழந்தை நம்பி, உங்கள் பேச்சை தட்டுவதற்குத் தயங்கும். அப்படியே, குழந்தை தவறு ஏதாவது செய்திருந்தாலும், உங்கள் கண்ணை நேரில் பார்க்கத் தயங்கும்.

**8. தப்புடா கண்ணம்மா :** குழந்தை தவறு செய்யும்போது அடித்து துன்புறுத்துவது மட்டுமில்லை, கடுமையான சொற்களால் திட்டுவதுகூட ரொம்பத் தப்பு. குழந்தை தவறு செய்தவுடன் சில நொடிகள் அமைதியாக இருங்கள். குழந்தை செய்ததில் உங்களுக்கு உடன்பாடில்லை என்பதைப் புரிய வையுங்கள். பின், ''எக்கேடாவது கெட்டுத் தொலைந்து போ'' என்று விட்டுவிடாமல், அதே செயலை சரியாகச் செய்யச் சொல்லுங்கள். அடுத்த முறை குழந்தை அந்தத் தவற்றைச் செய்யாது.

**9. கத்தாதீர்கள் :** குழந்தை தவறு செய்தவுடன் பெரும்பாலான தாய்மார்கள், ''நீ செய்றது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலை. உங்கூடப் பேச மாட்டேன். ஏன் இப்படி உயிரை வாங்குறே?'' என்று கத்துவது வழக்கம். அப்படி இல்லாமல், ''கண்ணம்மா... உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீ பண்ற காரியம்தான் பிடிக்கமாட்டேங்குது'' என்று அன்பாகச் சொல்லுங்கள்.

A SLIP OF THE FOOT

YOU MAY SOON RECOVER

BUT A SLIP OF THE TONGUE

YOU MAY NEVER GET OVER

# அன்புச் சங்கிலி

அது ஒரு சின்னக் கிராமம். என்றாலும் சாதியின் பேராலும் மதத்தின் பேராலும் ஏழை – பணக்காரன் என்கிற பாகுபாட்டின் பேராலும் ஏராளமான துண்டுகளாகச் சிதறிக் கிடந்தது. அண்ணன் தம்பிகளாக வாழவேண்டிய மக்கள் எலியும் பூனையுமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் கிராமத்தில் ஒரு கல்லூரி இருந்தது. அங்கே, புதிதாக ஒரு பெண்மணி வெளியூரில் இருந்து வந்து பேராசிரியையாக வேலைக்குச் சேர்ந்தார். முதல் நாளே அவர் தன் மாணவர்கள் அத்தனை பேருக்கும் தலா மூன்று ரிப்பன்களைக் கொடுத்து, ''உங்கள் வாழ்க்கையில் உண்மையிலேயே ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்திய மூன்று பேரைச் சந்தித்து இந்த ரிப்பன்களை அவர்கள் கையில் கட்டுங்கள். அப்படிக் கட்டும்போது ஒவ்வொருவரிடமும் கூடுதலாக இன்னும் மூன்று ரிப்பன்களைக் கொடுத்து நான் உங்களிடம் இப்போது சொன்னது போலவே சொல்லி, அவர்களையும் மும்மூன்று பேருக்கு அந்த ரிப்பன்களைக் கட்டச் சொல்லுங்கள்'' என்று அனுப்பினார்.

அந்தக் கல்லூரியிலேயே மிக மிக ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் இருந்தான். அவன் தனது படிப்புக்குப் புத்தகங்களைக் கொடுத்து உதவிய தன் சீனியர் மாணவன் ஒருவனைப் பார்த்து, ''நான் பள்ளியில் படித்தபோது நீ மட்டும் உன் புத்தகங்களை இலவசமாகக் கொடுத்திருக்கவில்லை என்றால், நான் இப்போது கல்லூரியில் காலடி எடுத்து வைத்திருப்பேனா என்றே தெரியாது'' என்று நெகிழ்ச்சியாகச் சொல்லி விட்டுத் தன் அன்பின் அடையாளமாக அந்த சீனியர் மாணவனின் கையில் ரிப்பனைக் கட்டினான். பின்னர், தன் பேராசிரியை சொன்ன மாதிரியே மேலும் மூன்று ரிப்பன்களைக் கொடுத்து, ''எங்கள் கல்லூரியில் அன்பு வாரம் கொண்டாடுகிறோம். அதனால் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்திய மிக முக்கியமான மூன்று நபர்களுக்கு இதைக் கட்டு'' என்று சொல்லி விடை பெற்றான்.

அவன் அங்கிருந்து சென்ற வெகு நேரத்துக்குப் பிறகும், அந்த ஏழை மாணவன் தன் நன்றியை நாத் தழுதழுக்கச் சொன்ன விதத்தை அந்த சீனியர் மாணவனால் மறக்க முடியவில்லை. பிறகு, அந்த மாணவன் தனக்குக் கல்வியின் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாயிருந்த ஒரு மூத்த அறிஞரைத் தேடிச் சென்று ஏழை மாணவன் கொடுத்த ரிப்பன்களில் ஒன்றைக் கட்டினான். அவர் உடனே யோசிக்க ஆரம்பித்து விட்டார். 'வாழ்க்கையில் இவன்போன்று எத்தனையோ பேர் முன்னுக்கு வரக் காரணமாக இருந்த நான், என்னுடைய **மகனைச் சரியானபடி** அக்கறையோடும் அன்போடும் வளர்க்காமல் போய்விட்டேனே!' என்று மனம் வருந்தினார்.

அன்று இரவு அந்த அறிஞர் தன் வீட்டுக்குச் சென்றதும், மகனை அழைத்து அவனது கையில் அந்த ரிப்பனைக் கட்டினார். உடனே அவரது மகன் வெடித்து அழுதான். 'ஐயோ, நான் ஒரு முட்டாள். உங்களைப் பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள இருந்தேனே.....நீங்கள் என் மீது வைத்துள்ள அன்பைப் புரிந்து கொள்ளாத பாவியாக இத்தனை நாள் இருந்துவிட்டேனே!' என்று அவன் கண்ணீர்விட்டு அழவும், அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. பதறிப்போய் மகனை அன்புடன் அணைத்துக் கொண்டார் அவர்.

சரியாக ஒரு வாரம் கழிந்தது. ஏழை மாணவன், சீனியர் மாணவன், அறிஞர், மகன்.....என்று அந்த அன்புச் சங்கிலி மேலும் மேலும் நீண்டது. இதே போல கல்லூரியில் படிக்கும் மற்ற மாணவர்களிடமிருந்து தொடங்கிய அன்புச் சங்கிலிகளும் நீண்டுகொண்டே போக, ஒரே வாரத்தில் அந்த ஊரில் உள்ள அத்தனை பேர் கைகளிலும் அன்பின் சின்னமாக ரிப்பன்கள்!

அதுவரை தங்களுக்குள் ஏதேதோ பேதங்களை வளர்த்துக்கொண்டு இருந்த ஊர்மக்கள், தாங்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் ஒருவரோடு ஒருவர் அன்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டவர்கள் என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டார்கள்.

# KARGIL WAR HERO

## MAJOR M. SARAVANAN, VR. C.

" Mummy, I will get you a VIR CHAKRA" are the words last uttered by Saravanan to his mother!

Major Mariappan Saravanan born at Rameshwaram on the 10th of August 1970, was commissioned into the First Battalion (INFANTRY) Bihar Regiment in 1995. On the night of 28th of May 1999, Major Saravanan volunteered to capture a strongly held enemy point in the BATALIK Sub-sector. Saravanan launched a fresh assault on point 4268, Jubar Hills at a height of 14,229 ft. He led from the front. Enemy firing was intense yet with utter disregard to his Personal safety he charged through a volley of bullets and fired rocket launcher destroying 2 Sangars and killing four enemy on the spot. In spite of having sustained injures on chest and abdomen Maj. Saravanan kept fighting until he was hit by another burst of bullet on his head and made the supreme sacrifice at 0630 hrs on the 29th May 1999

Saravanan's mortal remains could be retrieved only after 45 days of nonstop fighting!

Life at Trichy came to a standstill as people from different places irrespective of caste, creed and religion, thronged in thousands to bid farewell to this Brave soldier. True Patriotism was seen in every face.

For his extreme courage, undaunted bravery and supreme sacrifice, Maj. Saravanan was awarded the "VIR CHAKRA" and titled the "HERO OF BATALIK....!

Maj. Saravanan's father Lieutenant Colonel A. Mariappan was a doctor in the Army Medical Corps - an epitome of bravery, courage and above all service to mankind in his own self. Saravanan lived his life every bit his father had guided him to and died the way his father had wished...... in the highest traditions of the Indian Army, for the defence of our Holy Mother Land!

Let us salute this Valiant Son of Trichirappalli

**நம்மையும் மற்றவர்கள் பாராட்டும் நாள் வரட்டும்.**
**நம்மைப்பற்றி மற்றவர்கள் பெருமிதப்படும் நாள் வரட்டும்.**

# வெற்றியும், தோல்வியும் மாறிமாறி ஏற்படுவதற்கு என்ன காரணம் ?

இதே போன்ற கேள்வி ஒருமுறை **பெர்னாட்ஷாவிடம்** கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில்:

“நான் இளைஞனாக இருந்தபோது பத்து காரியங்களைச் செய்தால் அதில் ஒன்பது காரியங்கள் தோல்வியைத் தழுவின. இதற்கு என்ன காரணம் என்று பல தடவைகள் யோசித்த போது எனக்கு ஒரு உண்மை பளிச்சிட்டது.

தொண்ணூறு முறை முயன்றால், கண்டிப்பாக ஒன்பது தடவைகள் வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. அதை உணர்ந்தபிறகு ஒன்பது தடவைகள் மட்டுமின்றி அதற்கு மேலும் வெற்றிகள் பெற்றேன்.”

The heights by great men reached and kept were not attained by sudden flight. But, they, while their companions slept were toiling upward into the night.

“உயர்ந்த சிகரங்களை எட்டிய பெரியோர்களின் வெற்றிகள் அவர்களுக்குத் திடீரென வந்து சேரவில்லை. தமது சகாக்கள் அயர்ந்து உறங்கும் நள்ளிரவு நேரங்களில் கூட அவர்கள் இடையறாது உழைத்ததாலேயே அவர்கள் இவ்வெற்றிகளை அடைந்தார்கள்”

# ONE CAN : *Make a Difference*

**ONE SONG CAN SPARK A MOMENT**
**ONE FLOWER CAN WAKE THE DREAM**
**ONE TREE CAN START A FOREST**
**ONE BIRD CAN HERALD SPRING**
**ONE SMILE BEGINS A FRIENDSHIP**
**ONE HANDCLASP LIFTS A SOUL**
**ONE STAR CAN GUIDE A SHIP AT SEA**
**ONE WORD CAN FRAME THE GOAL**
**ONE VOTE CAN CHANGE A NATION**
**ONE SUNBEAM LIGHTS A ROOM**
**ONE CANDLE WIPES OUT DARKNESS**
**ONE LAUGH WILL CONQUER GLOOM**
**ONE STEP MUST START EACH JOURNEY**
**YOU ARE THE ONE;**
**YOU CAN MAKE A DIFFERENCE!**

# லட்சியத்தை அடையும் வழி என்ன?

தாமஸ் ஆல்வா எடிசன் எப்போதும் தன் சோதனைச் சாலையிலேயே இருந்து ஓயாமல் உழைக்கும் வழக்கம் கொண்டவர். வழக்கம்போல் ஒருநாள் இரவு நேரங்கழித்து வீடு திரும்பினார். அவர் மிகக் களைப்பாக இருப்பதைக் கண்ட அவர் மனைவி, ''எந்த நேரமும் இப்படி உழைத்துக் கொண்டே இருக்கிறீர்கள். உங்களுக்குக் கண்டிப்பாக ஓய்வு தேவை. எங்காவது போய் கொஞ்சம் இளைப்பாறுங்கள்'' என்றார்.

''எங்கே போவது?'' என்றார் எடிசன்.

''இந்த உலகத்திலேயே உங்களுக்குப் பிடித்தமான, மனதுக்குத் திருப்தியைத் தரும் இடத்துக்குச் செல்லுங்கள்.''

சற்று யோசித்த எடிசன், ''நீ சொல்வது சரி, நாளை அதிகாலையிலேயே அங்கே போய்விடுகிறேன்'' என்றார்.

மறுநாள் காலை அவர் சென்ற இடம்: **அவருடைய சோதனைச் சாலை.**

" IF INJUSTICE IS HAPPENING TO YOUR NEIGHBOUR AND YOU CAN SLEEP, WAIT FOR YOUR TURN. YOU ARE NEXT "

# அப்பாவுக்கு என்ன தெரியும் ?

## தந்தையைப் பற்றி மகன் !

**5 வயது** : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

**7 வயது** : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.

**10 வயது** : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.

**12 வயது** : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

**14 வயது** : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது ?

**21 வயது** : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா ?

**35 வயது** : ஏதோ கொஞ்சம் தெரியும்.

**40 வயது** : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே.

**45 வயது** : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே.

**50 வயது** : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா ?

**55 வயது** : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

**60 வயது** : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே....?

# EVERYBODY, SOMEBODY, ANYBODY, NOBODY

There was an important job to be done and **EVERYBODY** was sure that **SOMEBODY** would do it. **ANYBODY** would have done it but **NOBODY** did it. **SOMEBODY** got angry about it because it was **EVERYBODY's** job. **EVERYBODY** thought that **ANYBODY** could do it but **NOBODY** realized that **NOBODY** would do it. It ended up that **EVERYBODY** blamed **SOMEBODY** when **NOBODY** did what **ANYBODY** could have done !



# மாணவ, மாணவியர் நாட்டுக்கு உழைக்க கலாமின் 10 கட்டளைகள்

1. நான் நன்றாக உழைத்து படித்து கல்வியில் சிறப்பு பெறுவேன், நான் கற்கும் கல்வியை எழுத படிக்க தெரியாதவர்களுக்கு சொல்லித் தருவேன்.
2. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் 5 அல்லது 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிராமங்களுக்கு சென்று எழுத, படிக்கத் தெரியாதவர்களுக்கு கல்வி கற்றுத் தருவேன்
3. எனது வீட்டருகிலோ, அல்லது படிக்கும் இடத்திலோ 10 மரக்கன்றுகளையாவது நட்டு அவைகளை பேணிப் பாதுகாத்து மரங்களாக வளர்ப்பேன்.
4. நான் எங்கு வாழ்ந்தாலும் அங்கு சுற்றுப்புறங்களில் போதைப் பழக்கங்களுக்கு ஆளாகி தவிக்கும் 5 பேருக்காவது நல்வாழ்வு தந்து மீட்பேன்.
5. நான் காணும் சிலர் துயரப்படும்போது அவர்களுக்கு உதவி செய்து முகமலர்ச்சி அடையச் செய்வேன்.
6. மதங்களின் பெயரிலும், ஜாதிகளின் பெயரிலும், மொழிகளின் பெயரிலும் நடக்கும் தீவிரவாத செயல்களுக்கு ஒருபோதும் துணை போகமாட்டேன்.
7. நேர்மை வழியில் நடந்து மற்றவர்களும் நேர்வழியில் வாழ என்னால் ஆன உதவி செய்வேன்.
8. நான் நல்வழிச்சென்று நற்பணி செய்து எனது வாழ்வு மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க உதவ இறைவனை தினமும் பிரார்த்திப்பேன்.
9. மனநோயால் பாதிக்கப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு உதவி செய்வேன். உடல் ஊனமுற்ற சகோதரர்களை நம்மைப் போல சாதாரணமானவர்களாக வாழ வைக்க முயற்சி செய்வேன்.
10. நான் நாட்டிய வெற்றியை என்நாட்டு மக்களின் வெற்றியாக கருதி மகிழ்ச்சியுடன் கொண்டாடுவேன்.

இந்த 10 உறுதிமொழிகளையும் எடுத்துக் கொண்டால் நாட்டுக்காக எந்தவிதமான பணியிலும், செயலிலும் சாதிக்க முடியும். எனவே ஒவ்வொரு மாணவனும், மாணவியும் கடுமையாக உழைக்க வேண்டும். நல்வாழ்வு வாழ்ந்து நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டும். உங்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் !

# LOVE AND COMPASSION CAN WORK WONDERS

Hatred is the main cause for wars and terrorism. Harbouring hatred against someone was like swallowing poison and expecting the enemy to die. One had to learn to forgive others, for it was not a weakness, and the one who forgave derived the most benefit thereof.

One who could not control his or her anger could be considered emotionally handicapped. Just as the physically challenged was confined to a wheelchair, the person with the handicap of anger was confined by the inner negativity and would not be able to respond to situations. Hence, such persons should be approached with love and compassion.

The love and compassion could work wonders, as it might bring those *"Emotionally Handicapped"* to *" Normalcy "*.